## பரஸ்பர ஒத்துழைப்பு

இந்தக் கதை மிகவும் பிரபலமானது, ஒரு வயதானவர் தன்னுடைய மகன் களை ஒன்றாக அழைத்து ஒரு சுல்லிக்கட்டைக்கொடுத்து அதனை உடைக்கச் சொன்னார். அவர்களில் ஒவ்வொருவரும் அதனை வாங்கி உடைக்க முயன் றனர், அது எவ்வாறு இயலும்? அதன்பின், அனுபவமிக்க அந்தத் தகப்பன் அந்தக் கட்டிலிருந்து சுல்லிக்கம்புகளை ஒவ்வொன்றாகப் பிரித்து எடுத்து ஒவ்வொருவரிடமும் ஒன்றைக்கொடுத்து அதனை உடைக்கச் சொன்னார். ஒவ்வொருவரும் அதனை எளிதாகவே உடைத்துவிட்டனர். தந்தை தன் மகன்களுக்கு அறிவுரை கூறும் வகையில் , ஒரு தனி மனிதனுடைய ஆற்றல் வரையறைக்குட்பட்டிருக்கும், நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு இருப்பீர் களானால் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பினை அளிக்கமுடியும், உங்களை யாராலும் அழிக்கவும் முடியாது என்று கூறினார். அல்லாஹ் தஆலா இப் ராஹீம் (அ) அவர்களுக்குக் கஅபாவின் கட்டிடத்தை எழுப்புமாறு கட் டளையிட்டான். அவர்கள் தன்னுடைய மகன் இஸ்மாயீல் (அ) அவர்களை யும் இப்பயணியில் இணைத்துக்கொண்டார்கள், அவருடைய ஒத்துழைப் பினால் கஅபாவின் கட்டிடப்பணி நிறைவுபெற்றுவிட்டது. திருக்ஃகுர் ஆனில் இந்த சம்பவத்தைப்பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

وَإِذْ يَرْفَعُ إِبْرَٰهِـۧمُ ٱلْقَوَاعِدَ مِنَ ٱلْبَيْتِ وَإِسْمَـٰعِيلُ رَبَّنَا تَقَبَّلْ مِنَّآ ۖ إِنَّكَ أَنتَ ٱلسَّمِيعُ ٱلْعَلِيمُ ﴿١٢٧﴾ **(البقرة:127)**

***பொருள்: மேலும் நினைவுகூறுங்கள் இப்ராஹீமும் இஸ்மாயீலும் (அ) அவ்வீட்டின் சுவர்களை உயர்த்திக்கொண்டிருந்தபொழுது பிரார்த்தித்தார் கள், எங்கள் இறைவனே எங்களுடைய இப்பணியை ஏற்றுக்கொள்வா யாக, நிச்சயம் நீதான் அனைத்தையும் செவியேற்பவனாகவும் நன்கறிபவ னாகவும் இருக்கின்றாய்.***

இதுபோன்றே, ஹஜ்ரத் மூசா (அ) அவர்களை அல்லாஹ் ஃபிர்அவ்னிடம் அல்லாஹ் ஒருவனே என்ற அழைப்பினை எடுத்துரைக்க அனுப்பியபோது அவர் அல்லாஹ்விடம் என்னுடைய சகோதரர் ஹாரூன் (அ) அவர்களை தனக்குத் துணைவனாக ஆக்குமாறு துஆ செய்தார், அல்லாஹ்வும் அவரு டைய கோரிக்கையினை ஏற்றுக்கொண்டான். திருக்ஃகுர்ஆன் கூறுகிறது:

وَٱجْعَل لِّى وَزِيرًا مِّنْ أَهْلِى ﴿٢٩﴾ هَـٰرُونَ أَخِى ﴿٣٠﴾ ٱشْدُدْ بِهِۦٓ أَزْرِى ﴿٣١﴾ وَأَشْرِكْهُ فِىٓ أَمْرِى ﴿٣٢﴾ **(طه:29 إلى 32)**

*பொருள் மேலும், என் குடும்பத்தாரிலிருந்து ஒருவரை எனக்கு உதவியாள ராக நியமிப்பாயாக, அவரைக்கொண்டு என் கரத்தை வலுப்படுத்துவா யாக, மேலும் என் பணியில் அவரைத் துணைவராக்குவாயாக.*

த்ஜுல் ஃகர்னைன் மாட்சியும் ஆற்றலும் மிக்க ஒரு நீதி நிலைநாட்டும் மன்னராக இருந்தார். அவர் தான் பிரயாணம் மேற்கொண்ட நிலையில் அண்டை நாட்டவர்களான, யாஜூஜ் மாஜூஜ் சமூகத்தார் இழைத்துவந்த

கொடுமை மற்றும் வலுக்கட்டாயமாக இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்த ஒரு சமூகத்தார் வாழ்ந்துவந்த ஒரு ஊரைச் சென்றடைந்தார். அந்த மக்கள் த்ஜுல்ஃகர்னைன் மன்னரிடம் எங்கள் ஊருக்கும் யாஜுஜ் மாஜுஜ் சமூகத்தாருக்குமிடையில் அவர்கள் எங்கள்மீது மீண்டும் கொடுமைகளை இழைக்காவண்ணம் ஒரு தடுப்புச்சுவர் கட்டித்தரும்படி கோரிக்கை செய்தனர். அதற்கு த்ஜுல் ஃகர்னைன் கூறினார், நீங்கள் எனக்கு இரும்புத்தாது கொண்டு வாருங்கள் நான் உங்களுக்காக தடுப்புச்சுவர் கட்டிவிடுகிறேன். ஆகவே, அந்த மக்கள் ஒருவரோடொருவர் ஒத்துழைத்து பெருமளவில் இரும்புத்தாது ஒன்றுதிரட்டினர், த்ஜுல் ஃகர்னைன் அந்த இரும்புத் தாதை உருக்கி இரும்பு தயார்செய்து யாஜுஜ் மாஜுஜ் சமூகத்தார் வந்து கொடுமைகளை இழைத்த அந்தப் பாதையினை மூடிவிட்டார். இவ்வகையில், பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் ஒருவருக்கொருவர் உதவி செய்ததனால் இக்கொடுமைகளுக்கான வழி அடைக்கப்பட்டுவிட்டது. திருக்ஃகுர்ஆனில் இதனைப்பற்றிய விவரம் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது:

قَالُواْ يَٰذَا ٱلۡقَرۡنَيۡنِ إِنَّ يَأۡجُوجَ وَمَأۡجُوجَ مُفۡسِدُونَ فِي ٱلۡأَرۡضِ فَهَلۡ نَجۡعَلُ لَكَ خَرۡجًا عَلَىٰٓ أَن تَجۡعَلَ بَيۡنَنَا وَبَيۡنَهُمۡ سَدّٗا ﴿٩٤﴾

قَالَ مَا مَكَّنِّي فِيهِ رَبِّي خَيۡرٞ فَأَعِينُونِي بِقُوَّةٍ أَجۡعَلۡ بَيۡنَكُمۡ وَبَيۡنَهُمۡ رَدۡمًا ﴿٩٥﴾ **(الكهف: 94-95)**

பொருள்: *அம்மக்கள் கூறினார்கள், துல்ஃகர்னைனே, யாஜுஜ் மாஜுஜ் கூட்டத்தார் இந்நாட்டில் பரவலாக அராஜகத்தைச் செய்து வருகின்றார்கள், எனவே, நீர் எங்களுக்கும் அவர்களுக்கும் இடையே ஒரு தடுப்புச் சுவரை எழுப்பித்தருவதற்காக நாங்கள் உமக்கு ஏதும் கப்பம் செலுத்தவேண்டுமா? அதற்கு அவர் பதிலளித்தார், என்னுடைய இறைவன் எனக்குக் கொடுத் திருப்பவை ஏராளமானவை, எனவே, உங்கள் உழைப்பின் மூலம் எனக்கு உதவி செய்யுங்கள், நான் உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு தடுப்புச்சுவரை எழுப்பித்தருகிறேன்.*

www.uzairfalahi.com

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹிஜ்ரத்திற்குப்பின் முதன் முதலாக ஒரு மஸ்ஜிதைக் கட்டுவதற்கான முடிவினை எடுத்தார்கள். இந்த மஸ்ஜித் கட்டும் பணியில் அனைத்து நபித்தோழர்களும் பங்களித்தனர், இவ்வகையில், மஸ் ஜித் கட்டுமானப் பணி நிறைவுபெற்றது.

இதுபோன்றே, நபித்தோழர்களும் ஒன்று சேர்ந்து நிராகரிப்போருடன் ஜிஹாத் செய்துள்ளார்கள். அகழிப்போரில் நிராகரிப்போர் அனைவரும் கூட்டுச்சேர்ந்து மதீனா நகர்மீது படையெடுத்தபோது, ஹஜ்ரத் சல்மான் ஃபார்சி (ர) அவர்களுடைய ஆலோசனையின்படி இறைத்தூதர் ﷺ அவர்கள் அகழி வெட்டுவது என முடிவு செய்தார்கள். இப்பணியில் நபித்தோழர்கள் அனைவரும் தோளோடு தோளாக முழு ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புடன் அகழியை வெட்டியதன் காரணமாக நிராகரிப்போரின் தாக்

*குதல்களிலிருந்து மதீனா நகரம் பாதுகாக்கப்பட்டது, அல்லாஹ் தஆலா முஸ்லிம்களுக்கு வெற்றியை அளித்தான்.*

*மேற்கூறப்பட்ட அனைத்து நிகழ்வுகளிலும் பொதுவான அணுகுமுறையாக காணப்படுவது ஒருவர் மற்றவர்களுடனான ஒத்துழைப்பும் உதவியும்தான். அல்லாஹ் தஆலாவும் இதற்காகவே கட்டளையிட்டுக்கூறியுள்ளான்:*

وَتَعَاوَنُوا۟ عَلَى ٱلْبِرِّ وَٱلتَّقْوَىٰ ۖ **(المائدة: 2)** பொருள்: *எப்பணி நல்லதாகவும் இறையச்சத் திற்குரியதாகவும் உள்ளதோ அதில் எல்லோரும் ஒத்துழையுங்கள்*

**பரஸ்பர ஒத்துழைப்பின் சிறப்பு**

*பரஸ்பர ஒத்துழைப்பு என்பது ஒரு வெளிப்படையான உண்மை மட்டுமல் லாது முக்கியமான தேவையுமாகும். இதிலிருந்து எந்த நிலையிலும் தப் பிக்கமுடியாது. உண்மை என்னவெனில் வாழ்க்கைக்கான தேவைகளை யெல்லாம் தன்னந்தனியாகவே பூர்த்திசெய்துகொள்வது என்பது இயலாத ஒன்று. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், ஒருவரிடம் தேவைக்கு அதிகமாகக் கூடுதல் வாகனம் இருக்குமானால் அதனை வாகனம் இல்லாத வர்களுக்குக் கொடுக்கவேண்டும், இவ்வாறே, ஒருவரிடம் பயணம் செய் யும்போது அவருடைய தேவைக்கு அதிகமாகப் பொருட்கள் இருக்கு மானால் அதனை இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் (முஸ்லிம், அபூ தாவூத்). இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒருவரிடம் வேலை செய்பவர்க ளுக்கு வேலை பளு அதிகமாக இருக்குமானால் அதனை செய்து முடிப்ப தில் அவர்களுக்கு உதவவேண்டும் என்று ஊக்குவித்துள்ளார்கள், கூறுகி றார்கள்: அவர்களுடைய சக்திக்கு அதிகமாக அவர்கள் மீது பளுவைச் சுமத் தாதீர்கள், அவ்வாறு அதிகமாக இருக்குமாயின் அவர்களுக்குக் எளிதாக் கும் வகையில் கைகொடுத்து உதவவேண்டும்.* **(متفق عليه)**

*ஒரு விசுவாசிக்கு ( மூஃமின்) மிகச்சிறந்த உதவி மற்றும் ஆதவரளிப்பவன் அல்லாஹ்தான். மனிதன் தனக்குக் கஷ்டம் ஏற்படுமாயின் அவனிடமே உதவி தேடுகிறான், ஆதரவளிக்குமாறு அவனிடமே இறைஞ்சி மன்றாடுகி றான். ஒவ்வொரு தொழுகையிலும் அவன்* إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝ **(الفاتحة:5)** *நாங்கள் உன்னையே வணங்குகிறோம், உன்னிடமே உதவி தேடுகிறோம் என்று கூறுவது இதற்கான மிகத்தெளிவான ஆதாரமாகும். பரஸ்பர ஒத் துழைப்பு மற்றும் ஒருவரையொருவர் உதவிசெய்வது என்பது மனிதர் களுக்கு மட்டுமேயான பண்பு அல்ல, மாறாக, மிகச்சிறிய படைப்பான எறும்பு மற்றும் தேனீக்களிடமும் இந்தப் பண்பு பெறப்படுகின்றது. நாம் அனைவரும் அறிந்த வகையில் பகுத்தறிவு மற்றும் நல்லது கெட்டது அனைத்தினையும் அறியும் ஆற்றல் படைத்த மனிதனிடம் இந்தப்பண்பு*

காணப்படுவது மிகவும் தேவையானது மற்றும் இருக்கவேண்டிய ஒன்றாகும்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், பரஸ்பர அன்பு மற்றும் பாசம் ஆகியவற்றில் ஒரு மூஃமினுடைய உதாரணம் ஒரு உடலைப்போன்றதாகும். அவனுடைய எந்த ஒரு உறுப்பிலும் பாதிப்பு ஏற்பட்டால் உடல் முழுவதும் தூக்கமிழந்து ஜுரத்தினால் பாதிக்கப்பட்டுவிடுகின்றது (முஸ்லிம்). மற்றொரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது, அல்லாஹ்வின் கை, அதாவது அவனுடைய ஆதரவும் உதவியும் ஜமாஅத்தாக சேர்ந்திருப்பவர்களுடன் (ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புடன் வாழ்பவர்கள்) இருக்கும் (متفق عليه. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், ஒரு மூஃமின் மற்றொரு மூஃமினுக்கும் உள்ள உதாரணம் ஒரு கட்டிடத்தைப்போன்றது, அதன் ஒவ்வொரு பாகமும் மற்ற பாகத்தை உறுதிப்படுத்துகின்றது **(متفق عليه)**. ஒரு மூஃமின் எதுவரை தன்னுடை சகோதரனான மற்றொரு மூஃமினுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதில் இருப்பானோ அல்லாஹ்வும் அவனுடைய தேவைகளைப் பூர்த்திசெய்துகொண்டே இருப்பான், மற்றும் யார் அவனுடைய கஷ்டங்களில் உதவுகிறானோ அல்லாஹ் அவனுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் அனைத்தையும் எளிதாக்கிவிடுகிறான். ஒரு அடியான் எதுவரை மற்ற ஒரு அடியானுக்கு உதவி செய்துகொண்டிருப்பானோ அல்லாஹ்வும் அவனுக்கு உதவி செய்துகொண்டிருப்பான். இறைத்தூதர் ﷺ அவர்கள் மேலும் கூறுகிறார்கள், தன்னுடைய ஆற்றல் மற்றும் சக்தியைக் கொண்டு பலவீனமானவர்களுக்கு உதவி செய்வதும் ஸதாஃகாவாகும் (அஹ்மத்).

## எதில் ஒத்துழைப்பினை அளிக்கக்கூடாது

தீமையான செயல்கள், குழப்பம் மற்றும் பாவச்செயல்களில் ஒத்துழைக்கக் கூடாது, அல்லாஹ் கூறுகிறான்: (المائدة: 2) **وَلَا تَعَاوَنُوا۟ عَلَى ٱلْإِثْمِ وَٱلْعُدْوَٰنِ** பொருள்: *ஆனால், எது பாவமான காரியமாகவும் வரம்பு மீறுவதாகவும் உள்ளதோ அதில் எவருடனும் ஒத்துழையாதீர்கள்*

ஒரு முஸ்லிம் ஒருவரைப் பாவமான ஒரு செயலைச் செய்வதைக் கண்டால் அவரைக் கேலி செய்யவும் கூடாது, அவரை ஏசிப்பேசி இகழவும்கூடாது, ஏனெனில் அவன் பிடிவாதத்தில் இறங்கி ஷைத்தானின் சதித்திட்டங்களுக்கு இரையாகிவிடுவான். அவனுக்கு ஏதும் செய்வதானால் அதில் முக்கியமானது என்னவெனில் அவனுடைய கையைப்பிடித்து, அவனுக்கு அறிவுரை கூறி அவன் ஒரு தவறைச்செய்கிறான் என்று உணர்த்தவேண்டும்.

* * *



www.uzairfalahi.com